Book Series No : 07
ISBN - 978-81-928862-6-8

தேவீ நவராத்ரி பூஜையும்-மஹிமையும்

பொருளுதவி

சிவாகம ரத்னம் சிவஸ்ரீ. S. மணிவாசக குருக்கள்
கபிலதீர்த்தம், திருப்பதி.

தொகுப்பாசிரியர்

Dr. செ. வா. C. கார்த்திகேய சிவாச்சாரியர்,
திருப்பதி

திருமண விழா மலர்

வெளியீடு
ஸ்ரீஞானாம்பிகா ட்ரஸ்ட்

திருமண விழாமலர்

சௌ. ப்ரியவர்த்தினி M.B.A. - சிர. ஹரிஹரஸூதன் B.Tech.

திருமணத்தின் போது
இப்புத்தகம் வெளியிடப்படுகிறது

திருமண நாள் - 09-09-2015

எங்களது இல்லத் திருமண விழாவிற்கு வருகைதந்த அனைவருக்கும்
எங்களது உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

M. வித்யா, M.B.A.

M. கபிலேஷ்

देवी नवरात्रपूजा - महिमा

தேவீ நவராத்ரி பூஜையும் மஹிமையும்

09-09-2015 அன்று

ஸௌ. ப்ரியவர்த்தினி - சிர. ஹரிஹரஸூதன்

திருமண விழாமலராக வெளியிடப்படுகிறது

தொகுப்பாசிரியர்
சிவாகம கலாமணி, சிவாகம வாசஸ்பதி
Dr. செ. வா. C. கார்த்திகேய சிவாச்சாரியர்
சைவாகம பேராசிரியர்,
ஸ்ரீவேங்கடேச்வர வேத பல்கலைக்கழகம், திருப்பதி.

வெளியீடு
ஸ்ரீஞானாம்பிகா ட்ரஸ்ட்
2015

© Sri Gnanambika Trust	
Edition Year	2015
Book Serial No.	07
ISBN No:	**978-81-928862-6-8**
Name of the Title	Devi Navaratra Puja & Mahima
Content	Rules & Methods of Devi Puja
Language	Sanskrit, Tamil
Script	Devanagari, Tamil
Author / Editor	Dr. C. Karthikeya Sivachariar
Total Pages	104
Size	1/8 – Demmi
Copies	750
Computerized	Dr. C. Karthikeya Sivachariar
Publisher	Sri Gnanambika Trust
Printer	S.K. Printers

<u>Books are Avilable at</u> –

1. **SivaSri S. Manivachaka Gurukkal, Tirupati**
   Ph – 9441634234

2. **Dr. C. Karthikeya Sivachariar, Tirupati.**
   Ph – 09440268463.

SIVAGAMA PRAVEENAR, ALANKARA KALA RATNAM, SIVAGAMA VIDVAN,
SIVAGAMA VACHASPATI
TATPURUSHA SIVAM
T.G. KALYANASUNDARA GURUKKAL
NO. 23, Shawwallace Colony, CITLAPAKKAM, CHENNAI-600 064.

ஆசியுரை

யா தேவீ ஸர்வபூதேஷு சக்தி ரூபேண ஸம்ஸ்திதா என்று தேவீ மாஹாத்ம்யத்தில் கூறியிருப்பதை அனைவரும் அறிவோம். நமது முன்னோர்கள் குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே என்று சொல்வார்கள்.

இதனை அனைவரும் உணர்ந்து பயனடையும் பொருட்டு அனைத்து ஜீவராசிகளையும் படைத்தும் காத்தும் ரக்ஷித்தும் அருளும் சக்தியே தேவீ எனப் போற்றப்படுவதாகும்.

தேவியின் அருளைப் பெற பல விரதங்கள் சொல்லப்பட்டிருந்தாலும் சிறப்பாக ஆராதிப்பதற்கு நவராத்ரியை - ஆண்டுக்கு நான்கு நவராத்ரிகளைக் குறிப்பிட்டும், அதில் சாரதா நவராத்ரியை அனைவருடைய இல்லங்களிலும் ஆலயங்களிலும் சிறப்பாக வழிபடுவது குறித்து அனைவரும் அறியும்படி சொல்லப்பட்டுள்ளது. நவராத்ரி தினங்களில் வழிபடும் முறையும், அதனால் ஏற்படும் பலன்களும் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளன.

புரட்டாசி மாதம் அமாவாசை மறுதினம் முதல் தொடங்கி செய்யப்படும் நவராத்ரியே **சாரதா நவராத்ரி** என்றும், இதைச் செய்வதினால் வாழ்க்கைக்குரிய கல்வி, செல்வம், வீரம் என மூன்றும் முறையாகப்

பெறுவதற்கு மலைமகள், திருமகள், அலைமகள் எனக்கூறும் துர்கை, லக்ஷ்மீ, ஸரஸ்வதீ தேவியை அவரவர்கள் முறைப்படி கலசத்திலோ, தீபத்திலோ பூஜித்து தேவியின் திருவருளைப் பெறலாம் என்றுள்ளது.

இத்தருணத்தில் சக்தியின் வடிவமாகக் கருதி கன்யா - ஸுமங்கலிகளைப் பூஜித்து ஸௌபாக்ய த்ரவ்யங்களை தன் சக்திக்கேற்றவாறு அளிப்பதினால் அம்பிகையின் பூர்ணமான அருளைப் பெறலாம் என்று சாஸ்த்ரங்கள் வலியுறுத்துகின்றன.

இவை அனைத்தையும் பின்பற்றி பயனடைய வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தை மனதில் கொண்டு திருப்பதி காமாக்ஷி ஸமேத கபிலேச்வர ஸ்வாமி ஆலயத்தின் அர்ச்சகர் **சிவஸ்ரீ S. மணிவாசக குருக்கள் - திருமதி M. மாலினி** தம்பதிகள், அவர்களது ஸீமந்த புத்ரி **ஸௌபாக்யவதி ப்ரியவர்தனிக்கும் - சிரஞ்சீவி ஹரிஹரஸுதன்** என்ற வரனுக்கும் நடைபெறுகிற திருமண நன்னாளில் **தேவீ நவராத்ரி பூஜையும் - மஹிமையும்** என்ற தலைப்பில் திருமண மலராக இப்புத்தகத்தை வெளியிடுவது அறிந்து மனமகிழ்ந்து ஆசீர்வதிக்கின்றேன்.

இப்புத்தகத்தை சிவஸ்ரீ மணிவாசக குருக்களின் வேண்டுகோளுக்கிணங்க அரிய பல கருத்துக்களுடன், பல புத்தகங்களை ஒப்புநோக்கியும், ஆதாரங்களுடனும் நவராத்ரி காலங்கள், சிறப்புகள், கொலுப்படிக்கட்டுக்கள், வ்ரத நியமங்கள், உபசார வகைகள், தேவீ பூஜை, கன்யா பூஜை, ஸுமங்கலி பூஜை அனைத்தையும் அனைவரும் பூஜிக்கும்படி கல்போக்தமாக தொகுத்து

அளித்துள்ள திருப்பதி T.T.D. வேத பல்கலைக்கழக சைவாகம பேராசிரியரான சிவாகம கலாமணி **சிவஸ்ரீ Dr. C. கார்த்திகேய சிவாச்சாரியருக்கும்** எனது மனமார்ந்த ஆசியை வழங்குகிறேன். இவர்பணி மேன்மேலும் இதைப்போல் அரிய கருத்துக்கள் அடங்கிய நூல்கள் பல வெளியிட வேண்டும் என்றும், **தொகுப்பாசிரியரும், சிவஸ்ரீ S. மணிவாசக குருக்கள் தம்பதியரும், மணமக்களும்** எல்லா நலன்களும் பெற்று பெருவாழ்வு வாழ எல்லாம்வல்ல ஸ்ரீ ஸுந்தரகுஜாம்பிகா ஸமேத ஸ்ரீதேஜினீநாதரைப் ப்ரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றேன்.

T.G. கல்யாணஸுந்தர சிவாச்சாரியர்
சிட்லபாக்கம், சென்னை.

பதிப்புரை

எல்லாம்வல்ல உமையொரு பாகனாகிய ஸ்ரீகாமாக்ஷயம்பா ஸமேத ஸ்ரீகபிலேச்வரரின் அனுக்ரஹத்தினால் இறைவனை பூஜிக்கும் பாக்யம் கிடைக்கப்பெற்றது. **யாம் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம்** என்பதற்கிணங்க இப்பூவுலகில் அனைவரும் அனைத்து நலன்களும் பெறுவதற்கு சிறந்த வழியாக இருப்பது தேவீ பூஜையாகும். நவராத்ரியில் தேவீ பூஜை மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும்.

எனக்கு நீண்ட நாட்களாகவே அனைவருக்கும் பயன்படும் வகையில் ஏதாவது புத்தகம் வெளியிட வேண்டும் என்ற அவா இருந்து வந்தது. அதை பலமுறை சிவஸ்ரீ C. கார்த்திகேய சிவாச்சாரியரிடம் சொல்லி வந்தேன்.

அதற்கேற்றபடி எனது மகளின் திருமணத்தையொட்டி சாரதா நவராத்ரி வருவதினால் நவராத்ரி குறித்து வீட்டில் செய்யப்படும் பூஜைகள் - நியமங்களைக் குறித்தும் புத்தகம் வெளியிடவேண்டும் என எனது கருத்தைத் தெரிவித்தேன். அவரும் மிகக்குறுகிய காலத்திலேயே புத்தகத்தை எழுதித் தந்தார். இப்புத்தகத்தில் நவராத்ரி கால நிர்ணயம், நவராத்ரி பெருமைகள், வ்ரத நியமங்கள், கொலுப்படிக்கட்டுக்கள், ஸரஸ்வதி பூஜை, பூஜைக்குண்டான நிவேதன, புஷ்ப, பழ வகைகள், பலன்கள், பூஜையின் சிறப்புகள், தேவி, கன்யகா,

ஸுமங்கலி பூஜைகள் முதலிய பல அரிய விஷயங்கள் பெரிய கட்டுரையாகவே தரப்பட்டுள்ளது.

மேலும் பூஜை முறைகளும் தமிழ், மற்றும் ஸம்ஸ்க்ருத (தேவநாகரி) லிபியில் தரப்பட்டுள்ளது. இவ்வாறான புத்தகங்கள் வருங்காலத்தில் வெளியிட வேண்டுமென்று இறையருளை இறைஞ்சுகின்றேன்.

இப்புத்தகம் வெளியிட இருப்பதையும், அதற்கு ஆசியுரை வழங்க வேண்டுமென்று திருவீழிமிழலை சிவாகம வாசஸ்பதி **சிவஸ்ரீ T. G. கல்யாணஸுந்தர சிவாச்சாரியரிடம், சிட்லபாக்கம்** தொலைபேசி மூலம் கேட்டுக்கொண்டேன். இவ்வாறான நல்ல கார்யங்கள் பல மேன்மேலும் செய்ய வேண்டுமென வாழ்த்தி ஆசியுரையை அனுப்பி வைத்தார்கள். அவர்களுக்கு எனது நமஸ்காரங்கள். இப்புத்தக ஆசிரியர் **சிவஸ்ரீ Dr. C. கார்த்திகேய சிவாச்சாரியர்** மேன்மேலும் பல புத்தகங்களை வெளியிட வேண்டும் என கபிலேச்வர ஸ்வாமியை ப்ரார்த்திக்கிறேன்.

இப்புத்தகத்தை குறுகிய காலத்தில் அச்சிட்டுத் தந்த திரு **S. முனிராஜா - S. K. Printers** அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்புத்தகம் அனைவருக்கும் பயன்படவேண்டும் என இறைவனைப் ப்ரார்த்திக்கின்றேன்.

சிவஸ்ரீ S. மணிவாசக குருக்கள்
அர்ச்சகர், கபிலதீர்த்தம், திருப்பதி.

முகவுரை

ஸ்ரீஞானாம்பிகா ஸமேத ஸ்ரீவேதாந்தீச்வரரின் அனுக்ரஹத்தாலும், பெற்றோர்கள், குருமார்களுடைய ஆசியினாலும் தற்போது **தேவீ நவராத்ரி பூஜையும் மஹிமையும்** என்ற புத்தகம் வெளியிடப்படுகிறது.

இப்புத்தகத்தில் நவராத்ரியைக் குறித்து ஒரு விளக்கக் கட்டுரையும், தமிழ் மற்றும் தேவநாகரி லிபியில் தேவீபூஜை, கன்காபூஜை, ஸுமங்கலி பூஜை ஆகியவைகளும் தரப்பட்டுள்ளன.

கபில தீர்த்தம் அர்ச்சகரான **சிவஸ்ரீ S. மணிவாசக குருக்களின்** விருப்பத்திற்கிணங்க இப்புத்தகம் தொகுக்கப்பட்டுள்ளது. தனது ஸீமந்தபுத்ரீ **ஸௌபாக்யவதி ப்ரியவர்த்தினிக்கும்** - சென்னை வடபழனிமுருகன் ஆலய அர்ச்சகர் சிவஸ்ரீ முத்து குருக்களுடைய மகன் **சிரஞ்சீவீ. ஹரிஹரஸுதனுக்கும்** விவாஹம் நடைபெறும் வேளையில் திருமணமலராக இப்புத்தகம் வெளியிடப்படுவது சிறப்பாகும்.

தேவியானவள் அனைவரையும் ரக்ஷித்துக் காப்பவள். காம்யங்களைத் தந்து மோக்ஷத்தையும் அடைவிப்பவள். கபிலேச்வரரையும், ஸுப்ரஹ்மண்ய ரையும் இணைக்கும் விதமாக தனது பூஜை, மஹிமைகளைக் குறித்த புத்தகத்தை இவர்களின் மூலம் வெளியிடச் செய்துள்ளாள், இது **சிவன்** பார்வதி, **முருகன்** மூவரும் இணைந்த ஸோமாஸ்கந்த ரூபமாகவே தெரிகின்றது என்பது **தேவியின் கருணை** மட்டுமேயாகும்.

அனைவருக்கும், முக்யமாக வீட்டில் இருக்கும் பெண்களுக்கு உபயோகப்படும் வகையில் புத்தகங்கள் வெளியிடப்பட வேண்டும், வைதிக தர்மத்தை அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தினால் இந்த ஸத்கார்யத்தில் **சிவஸ்ரீ S.மணிவாசக குருக்கள் - ஸ்ரீமதி M. மாலினி தம்பதிகள்** ஈடுபட்டுள்ளார்கள். அவர்களுக்கு என்னுடைய நமஸ்காரங்கள்.

இப்புத்தகம் தொகுக்கும் வேளையில் வ்ரத சூடாமணி, கல்ப மஞ்ஜரீ போன்ற பல புத்தகங்களிலிருந்து ப்ரமாணங்கள் எடுத்தாளப்பட்டன. மேலும் சிவஸ்ரீ சோமசேகர சிவாச்சாரியாரின் கட்டுரை, எனது குருநாதரின் கட்டுரையும் ப்ரமாணமாக எடுத்தாளப்பட்டது. இப்புத்தகத்தில் கல்போக்தமான பூஜை முறையே தரப்பட்டுள்ளது. நாம் க்ருஹங்களின் வ்ரதங்களில் கல்போக்த முறையையே அனுஸரிக்க வேண்டுமென ப்ரமாணங்கள் வலியுறுத்துகின்றன. புத்தகங்களின் ஆசிரியர்கள், கட்டுரை வெளியீட்டாளர்களுக்கு என் நன்றிகள்.

திருமணவிழா **மணமக்களும், அவர்களின் பெற்றோர்களும், குடும்பத்தாரும்** இஹபர ஸுகங்களைப் பெற்று இவ்வாறான பல ஸத்கார்யங்களை மேன்மேலும் செய்ய இறையருள் கூட்டவேண்டுமாய் ஸ்ரீஞானாம்பிகா ஸமேத ஸ்ரீவேதாந்தீச்வரரைப் ப்ரார்த்திக்கிறேன்.

Dr. செ.வா. C. கார்த்திகேய சிவாச்சாரியர்

நவராத்ரி பூஜையும் மஹிமையும் - ஓர் விளக்கம்

நான்கு நவராத்ரிகள்

துர்வாச கல்பத்தில் ஒரு வருடத்தில் தேவிக்குண்டான 4 நவராத்ரிகள் சொல்லப்பட்டுள்ளன. அவைகள் சித்திரையில் **வஸந்த நவராத்ரி**யும், ஆடி மாதத்தில் **ஆஷாட நவராத்ரி**யும், புரட்டாசி மாதத்தில் **சாரதா நவராத்ரி**யும், தை மாதத்தில் **ச்யாமளா நவராத்ரி** என்பதாகும். இந்த நான்கு நவராத்ரிகளும் அமாவாசைக்கு மறுநாள் துவங்கி ஒன்பது நாட்கள் சிறப்பாக வழிபடத்தகுந்ததாகும்.

சாரதா நவராத்ரி

தேவிக்கு நான்கு நவராத்ரிகள் சொல்லப்பட்டிருந்தாலும் உத்தராயணத்தில் **வஸந்த நவராத்ரி**யும், தக்ஷிணாயனத்தில் **சாரதா நவராத்ரி**யும் தேவியைப் பூஜிக்க சிறந்த காலங்களாகும். அதிலும் புரட்டாசி மாதத்தில் வரும் சாரதா நவராத்ரி காலமே விரதமாக அனுஸரிக்கப்பட்டு வருகின்றது. இச்சமயத்தில் தேவியை ஒன்பது நாட்கள் விரதமிருந்து பூஜித்தால் தேவியின் அனுக்ரஹத்திற்கு பாத்ரர்களாகலாம்.

நவராத்ரி பூஜா கால நிர்ணயம்

நாம் காலத்தைக் கணக்கிடுவதற்கு ஒன்பது விதமான மானங்கள் (காலஅளவுகள்) **ஸூர்ய ஸித்தாந்தம்** என்ற புத்தகத்தில் மானாத்யாய ப்ரகரணத்தில் சொல்லப்பட்டுள்ளன. அவையாவன 1. ப்ராஹ்மம் 2. தைவம் 3. பித்ர்யம் 4. ப்ராஜாபத்யம் 5. பார்ஹஸ்பத்யம் 6. ஸௌரம் 7. ஸாவனம் 8. சாந்த்ரம் 9. ஆர்ஷம் என்பதாகும். ஒன்பது மானங்கள் (காலஅளவுகள்) இருந்தபோதிலும் நாம் தென்னிந்தியாவில் ஐந்து மானங்களையே பெரும்பாலும் உபயோகப்படுத்துகின்றோம். அதிலும் ப்ரஸித்தமாக ஸௌரமானம், சாந்த்ரமானம் என்பவையே அனைவருக்கும் தெரிந்தவைகளாகும்.

நாம் பெரும்பாலும் ஆலயங்களின் பூஜைகளில் ஸௌரமானப்படியும், க்ருஹங்களில் அதாவது வீட்டில் செய்யப்படும் வ்ரதம் முதலானவைகளில் சாந்த்ரமானத்தையும் கடைபிடித்து வருகின்றோம்.

சாரதா நவராத்ரி பூஜையானது சாந்த்ரமானப்படியே நாம் அனைவரும் அனுஸரித்து வருகின்றோம். **சாந்த்ரமான மாத**மானது அமாவாசை மறுநாள் ப்ரதமை முதல் துவங்கி அமாவாசை வரை கணக்கிடப்படும். சாரதா நவராத்ரி வ்ரதமானது ஆச்வயுஜ மாதத்தில் கடைபிடிக்கப்பட வேண்டும் என விதிக்கப்பட்டுள்ளது. ஆச்வயுஜ மாதத்தில் அதாவது சாந்த்ரமானப்படி ஐப்பசி மாதத்தில் (ஸௌரமானப்படி

புரட்டாசி மாதத்தில் அமாவாசைக்கு மறுநாளிலிருந்து) சுக்லபக்ஷ வளர்பிறை ப்ரதமை முதல் நவமி வரை நவராத்ரி காலமாகும். ப்ரதமையானது அமாவாசை முடிந்தவுடன் வரும்படியாக இருக்க வேண்டும். இங்கு **ப்ரதிபத் தினமாரப்ய வ்ரதோத்ஸவமாரபேத்** என்ற காரணாகம வாக்யத்தினால் திதியின் முக்யத்துவத்தைவிட தின சப்தத்தின் முக்யத்துவத்தை உணரலாம். சூர்யோதயத்தின் போது ப்ரதமை எந்த நாளில் உள்ளதோ அந்த நாளே நவராத்ரியின் ஆரம்பமாகும். தினம் என்றால் சூர்யோதயம் முதலாக மறுநாள் ஸூர்யோதயம் வரையிலான காலமாகும். அதுவே நாள் என்று சொல்லப்படும். இவ்வாறாக கணக்கிடும் போது மஹாஷ்டமி, மஹாநவமி, விஜயதசமி ஆகியவைகளையும் கணக்கில் கொள்ள வேண்டும். ஒருசில வருடங்களில் விஜயதசமி வரை 10 நாட்களும், சில வருடங்களில் 9 நாட்களும் வரும். ஆகவே ஆரம்பத்தில் ப்ரதமையும் முடிவில் நவமியுமே நிர்ணயத்திற்கு ஏற்றுக்கொள்ளத்தக்கவை. இவ்வாறாக நவராத்ரி காலத்தை நிர்ணயிக்க வேண்டும். **ப்ரதமையுடன் கூட ஹஸ்த நக்ஷத்ரம்** இருப்பது வ்ரதாரம்பத்திற்கு சிறப்பானதாகும்.

இந்த ஒன்பது நாள்களிலும் வ்ரதமிருந்து தேவியை பூஜிக்க வேண்டும். அல்லது ஏழு, ஐந்து, மூன்று, ஒரு நாள் என்பதாக கடைசி நாளிலிருந்து கணக்கிட்டு வ்ரதமிருந்து பூஜிக்க வேண்டும். விஜயதசமியில் நிறைவு செய்ய வேண்டும்.

வீட்டில் அமாவாசையன்றே நவராத்ரி கொலுப்படிக்கட்டுகள் வைத்து புதியதாக கலச ஸ்தாபனம் செய்து, ப்ரதமையிலிருந்து பூஜைகள் செய்யப்படும். ஆலயங்களில் நித்யமும் தேவீ பூஜை செய்யப்பட்டு வருவதால் அமாவாசையன்று கலச ஸ்தாபனம் செய்வதில்லை. அவ்வாறு செய்தால் அமாவாசையன்றே பூஜை துவங்கியதாக ஆகிவிடும். ஆகவே ப்ரதமையன்றே கலச ஸ்தாபனம் செய்யப்பட்டு பூஜைகள் செய்யப்படுகின்றன.

துர்காஷ்டமீ - மஹாஷ்டமீ கால நிர்ணயம்

அதாஶ்விந ஶுக்லாஷ்டமீ மஹாஷ்டமீ ।
தத்ராஷ்டம்யாம் பத்ரகாளீ தக்ஷயஜ்ஞவிநாஶிநீ ।
வ்ரத சூடாமணி - பக்கம் - 129.

சாந்த்ரமான ஐப்பசி மாதம் சுக்லபக்ஷ வளர்பிறை அஷ்டமீ - மஹாஷ்டமீ என்று சொல்லப்படும். அந்த அஷ்டமியில் பத்ரகாளியானவள் தக்ஷன் நடத்திய யாகத்தினை அழித்தாள் என்று சொல்லப்பட்டுள்ளது. இந்நாளையே நாம் துர்காஷ்டமீ என்று அழைக்கின்றோம்.

ஸரஸ்வதி பூஜை கால நிர்ணயம்

நாம் நவராத்ரியின் 9ம் நாளில் ஸரஸ்வதி பூஜையையும், ஆயுதபூஜையையும் செய்து வருகின்றோம்.

மூலர்க்ஷே ஸரஸ்வதீஸ்தாபநம் என்ற தலைப்பில் **வ்ரதசூடாமணி பக்கம் - 113 ல்**

தத்ரைவ மூலநக்ஷத்ரே புஸ்தகஸ்தாபநமுக்தம் ருத்ரயாமளே -

மூலருக்ஷே ஸுராதீஶ பூஜநீயா ஸரஸ்வதீ ।
பூஜயேத் ப்ரத்யஹம் யாவத் ஶ்ரவணாந்தே
விஸர்ஜயேத் ॥
ஆஶ்விநஸ்ய ஸிதே பக்ஷே மேதா நாம ஸரஸ்வதீ ।
மூலேநாவாஹயேத் தேவீம் ஶ்ரவணேந
விஸர்ஜயேத் ॥

என்று சொல்லப்பட்டுள்ளது.

ருத்ரயாமளத்தில் புஸ்தக ஸ்தாபனம் - ஹே தேவேந்த்ரனே, மூல நக்ஷத்ரத்தில் ஸரஸ்வதியை பூஜிக்க வேண்டும். அன்றிலிருந்து தினந்தோறும் பூஜித்து ச்ராவணம் (திருவோணம்) நக்ஷத்ரத்தில் விஸர்ஜனம் செய்ய வேண்டும். சாந்த்ரமான ஐப்பசி மாதத்தின் வளர்பிறையில் **மேதா** என்ற பெயரையுடைய **ஸரஸ்வதி**யை பூஜிக்க வேண்டும்.

அவ்வாறாகவே **வ்ரதசூடாமணி பக்கம் - 143 ல்**
அத்ரைவாஶ்விந ஶுக்லநவம்யாம் ஸரஸ்வதீபூஜா ॥
மூலேத்வாவாஹயேத்தேவீம் பூர்வாஷாடே து
பூஜயேத் ।

உத்தராஷாடே பலிம் தத்யாச்ச்ரவணாந்தே
விஸர்ஜயேத் ||

இத்யுக்தவசநரீத்யா உத்தராஷாடயுக்தநவம்யாம் கல்போக்தவிதிநா வாணீபூஜநம் தாக்ஷிணாத்யேஷு ப்ரஸித்தம் | நவமீபூஜா விஶேஷாத் கேவல நவம்யாமபி பூஜ்யா ||

சாந்த்ரமான ஐப்பசி மாதத்தின் வளர்பிறை நாட்களில் வரும் நவமியில் ஸரஸ்வதியை பூஜிக்க வேண்டும். அதாவது நவராத்ரியின் **7ம் நாள்** மூல நக்ஷத்ரத்தில் தேவியை ஆவாஹனம் செய்ய வேண்டும். **8ம் நாள்** பூராடம் நக்ஷத்ரத்தில் சிறப்பாக பூஜிக்க வேண்டும். **9ம் நாள்** உத்திராட நக்ஷத்ரத்தில் பலியைச் செய்ய வேண்டும். **10ம் நாள்** திருவோண நக்ஷத்ரத்தின் கடைசியில் விஸர்ஜனம் செய்ய வேண்டும்.

இவ்வாறாக கல்பங்களில் சொல்லப்பட்டவாறு பூஜையைச் செய்வது தென்னிந்தியாவில் ப்ரஸித்தமாக உள்ளது. மேலும் நவமியில் பூஜை என்பதினாலேயே அனைத்து நவமீ நாட்களிலும் பூஜை செய்வதும் சிறப்பாகும்.

அதாவது நவராத்ரியின் 7ம் நாள் ஸரஸ்வதீ பூஜையைச் ஆரம்பித்து விஜயதசமியில் முடிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது.

நவராத்ரம் - நவராத்திரி

நவ என்ற சொல் ஒன்பதைக் குறிக்கும். நவ என்றால் புதியது என்பதாகும். எண்ணிக்கையில் ஒன்பது எண்ணிக்கைக்கு பல விசேஷங்கள் உள்ளன. நவ சக்திகள், நவதூதிகள், நவக்ரஹங்கள், நவதான்யங்கள், நவரத்னங்கள், நவநிதிகள், நவ தாதுக்கள், நவபாஷாணங்கள், நவரஸங்கள், என ஒன்பதின் பெருமைகளை சொல்லிக்கொண்டே போகலாம். தசரத புத்ரரான ஸ்ரீராமசந்த்ரமூர்த்தி உதித்த தினம் நவமியாகும். இதற்கெல்லாம் மகுடமாக வருடத்தில் தேவிக்குண்டான 4 நவராத்ரி வ்ரதங்களும் ஒன்பது என்ற எண்ணிக்கையிலேயே சொல்லப்பட்டுள்ளன. மேலும் நவ என்ற சொல்லிற்கு புதியது என்றும் பொருள் கூறப்படும். நவராத்ரி என்பதை புதிய ராத்ரி என்றும் பெரியோர்கள் கூறுவார்கள். ஏனெனில் இந்த தினங்களில் தேவியானவள் நம்முடைய தீவினைகளை நீக்கி நமக்கு நல்லருள் புரிகின்றாள்.

இந்த ஒன்பது நாட்களிலும் தேவி பராசக்தி எனப்படும் ஸ்ரீத்ரிபுரஸுந்தரியானவள் மஹாகௌரி, மஹாலக்ஷ்மி, மஹாஸரஸ்வதி என்ற த்ரிகுணாத்ம ஸ்வரூபிணிகளின் ஒருங்கிணைந்த சக்தியாக விளங்குகிறாள்.

நவராத்ரியின் முதல் மூன்று நாட்கள் துர்கையையும், இரண்டாவது மூன்று நாட்கள்

மஹாலக்ஷ்மியையும், கடைசி மூன்று நாட்கள் ஸரஸ்வதியையும் சிறப்பாக பூஜிக்க வேண்டும்.

இந்த ஒன்பது நாட்களிலும் தேவியை வ்ரதம், பூஜை, உத்ஸவம் முதலானவைகளால் மகிழ்விக்க வேண்டும்.

தசரா

கராங்குளி நகோத்பன்ன நாராயண தசாக்ருதி: என்ற லலிதா ஸஹஸ்ரநாமத்திற்கேற்ப தேவியை ஸ்ரீராம ரூபிணியாக எண்ணி, ராவணனை வதைத்த சரிதத்தை நினைவுகூர்ந்து தசரா என வட இந்தியர் நவராத்ரியைப் போற்றுவர்.

தச + ஹரா = தசரா.

தச என்றால் பத்து , பத்து தலையுடைய ராவணனை, ஹரா - அழித்தவள், ஆகவே தசரா என்று தேவிக்கான நவராத்ரியை தசராவாக வடஇந்தியர்கள் வழிபடுவார்கள்.

மஹாகாளிக்கு 10 முகங்கள், 10 கைகள், 10 கால்கள் உள்ளதாலும், சக்தி வழிபாட்டில் காளியே பரதேவதையாக, ஞானரூபினியாக சொல்லப்பட்டுள்ள தாலும் 10 நாட்கள் - தசமஹாவித்யாவாக பூஜித்தலையே தசராவாகவும் சொல்லப்படுகின்றது.

நவராத்ரி பெருமைகள்

நவராத்ரியின் பெருமைகள் அளவிடற்கரியது. தேவியின் நவராத்ரி வ்ரதமானது அனாதி காலமாகவே செய்யப்பட்டு வருகின்றது. தேவியின் அருளால் தேவர்களும், முனிவர்களும், அவதார புருஷர்களும், மானுடர்களும் இதை கடைபிடித்து தேவியின் அனுக்ரஹத்திற்கு பாத்ரர்களானார்கள்.

ஸ்ரீராமபிரானும் நவராத்ரி வ்ரதத்தை அனுஷ்டித்ததாக ஸூதமுனிவர் புராணங்களில் கூறுகின்றார். வாலியை வதம் செய்து ஸுக்ரீவனுக்கு அரசை அளித்துவிட்டு மலைச்சாரலில் ஸ்ரீராமபிரான் மனநிம்மதி இன்றி, ஸீதா தேவியை நினைத்து வருந்தியபடி காலம் கழித்துக்கொண்டு இருந்தார். அப்போது நவராத்ரி காலம் தொடங்க இருந்தது. இந்நிலையில் நாரதர் ராமனை வந்தடைந்தார். ஸ்ரீராமபிரான் தனது மனவருத்தத்தை நாரதரிடம் தெரிவித்தார். உடனே நாரதர் அப்போது தொடங்க இருந்த நவராத்ரியைக் குறித்து கூறி 9 நாட்களும் தேவியை வழிபடுமாறு எடுத்துரைத்தார். அப்போது ஸ்ரீராமபிரான் வனவாசத்திற்கு வந்துள்ள நான் இந்த மலைச்சாரலில் நவராத்ரி மஹோத்ஸவத்தை எப்படி நடத்த முடியும் என்று நாரதரிடம் கேட்டார். அதற்கு நாரதர் **வன்ய நவராத்ரி** என்று ஒன்று உண்டு. காட்டில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டு செய்வதாகும். இதனால் தேவியும் ப்ரீதியை அடைவாள் என்று கூறி, அதை அனுஷ்டிக்கும் படியும் கூறினார். தானும்

உடனிருந்து நடத்தி வைத்தார். இதனால் ஸ்ரீராமர் உடனே மனம் தெளிந்து ஸுக்ரீவனை அழைத்து ஸீதையைத் தேடும்படி உத்தரவிட்டார். அனுமன் ஸீதாதேவியை கண்டுபிடித்து வந்தார், ஸ்ரீராமரும் ராவணனை வதம் செய்து அயோத்தி சென்று முடிசூட்டிக்கொண்டார் என உள்ளது.

இதே போல் க்ருஷ்ணாவதார காலத்தில் ஒரு ஸமயம் ஸ்ரீக்ருஷ்ணர் தனக்கு ஏற்பட்ட அவப்பெயரை துடைக்க எண்ணி, ச்யமந்தகமணியைத் தேடிக்கொண்டு கானகத்திற்கு வந்தார். அப்போது பலநாட்கள் ஆகியும் ஸ்ரீக்ருஷ்ணர் நாடு திரும்பாத காரணத்தால் வஸுதேவர் மனம் கலங்கி வருந்தினார். தற்செயலாக த்வாரகை வந்த நாரத மஹர்ஷி வஸுதேவரை அகஸ்த்ய கல்பத்தில் கூறியபடி நவராத்ரியை அனுஷ்டித்து ஜகன்மாதாவை பூஜிக்கும்படி கூறினார். வஸுதேவரும் அதன்படி ஒன்பது தினங்களும் தேவீ உபாஸகர்களை வரவழைத்து முறைப்படி வ்ரதத்தைக் கடைபிடித்தார். உடனே ஸ்ரீக்ருஷ்ணரும் மணியை மீட்டுகொண்டு வந்து தனக்கேற்பட்ட அபவாதத்தை நீக்கிக் கொண்டார். ஜாம்பவானிடமிருந்து பெற்றுவந்த மணியை அதற்குரிய ஸத்ராஜித்திடம் கொடுத்தார். ஜாம்பவானின் வளர்ப்புமகளான ஜாம்பவதியைத் திருமணம் செய்து கொண்டார். வெற்றியுடன் திரும்பிவந்த தன்மகனைக் கண்ட வஸுதேவரும் அம்பாளின் கருணையைப் போற்றினார்கள். இதனால் ஸத்ராஜித்தும் தன் மகள் ஸத்யபாமாவை ஸ்ரீக்ருஷ்ணருக்கு மணமுடித்துக் கொடுத்தார் என கூறுகிறது.

வன்னிமரம் பூஜை

நவம்யாம் பூஜயேத்தேவீம் தஶம்யாம் ச ஶமீம் யஜேத் ।
ராஜா ராஷ்ட்ராபிவ்ருத்த்யர்தம் தஶம்யாம் பூஜயேத் ஶமீம் ॥

தசமி அன்று காலையிலோ மாலையிலோ சமீ வ்ருக்ஷபூஜை (வன்னிமரபூஜை) செய்ய வேண்டும். இதனால் அரசனும் ராஜ்யமும் மேன்மையடையும் என காரணாகமம் கூறுகின்றது.

ஶமீ ஶத்ருவிநாஶாய ஶமீ பாபப்ரணாஶிநீ ।
ஶமீ ஸம்பத்கரீ சைவ ஶமீம் சைவ நமோ நம: ॥

பத்தாம் நாள் தசமி திதியில் வன்னி மரத்தடியை அலங்கரித்து அம்மரத்தில் துர்கா, லக்ஷ்மீ, ஸரஸ்வதி, காளீ மற்றும் அஷ்டலோக மாத்ரு பூஜையைச் செய்து சத்ரு நாசத்திற்காகவும், பாவங்களைப் போக்குவதற்காகவும், செல்வங்களைப் பெறுவதற்காகவும் ப்ரதக்ஷிணம் செய்து ப்ரார்த்திக்க வேண்டும் என்று காரணாகமத்தில் சொல்லப்பட்டுள்ளது.

நவசக்தி பூஜை

இந்த ஒன்பது நாட்களும் தேவி பராசக்தி ஒன்பது விதமான பெயர்களைக் கொண்டு பக்தர்களுக்கு அருள்பாளிக்கிறாள். அவையாவன கௌமாரீ, த்ரிபுரா,

கல்யாணீ, ரோஹிணீ, காளிகா, சண்டிகா, சாம்பவீ, துர்கா, ஸுபத்ரா என்பதாகும்.

மேலும் நவசக்திகள் பலவாறாக சொல்லப்படும். வாமாதி சக்திகள் ஒன்பது. சைலபுத்ரீ முதலான ஒன்பது நவதுர்கைகள். நவகாளிகள், நவதூதிகள் என்பதாகும்.

கொலுப்படிக்கட்டுக்கள்

கொலுப்படிக்கட்டுகள் நவராத்ரியில் முக்கியமானதாகும். வீட்டின் இடம் மற்றும் வசதிக்கேற்றவாறு மூன்றிலிருந்து ஒன்பது, பதினோரு படிக்கட்டுகள் வரை வைக்கலாம். அதற்கு மேலும் அவரவர் வழக்கப்படி வைத்துக்கொள்ளலாம். அனைத்து படிக்கட்டுகளும் ஸமமான அளவுள்ளவைகளாகவே இருத்தல் வேண்டும். படிக்கட்டுகளின் மேல்படிக்கட்டில் கலசத்தை வைக்க வேண்டும். அவரவர் குடும்ப வழக்கப்படி கலசத்தில் ஜலம் அல்லது அரிசி, ரத்னங்களை வைக்கலாம். புதிதாக கொலுப்படிக்கட்டுகள் வைக்க விரும்புவோர் தங்களது வீட்டின் பெரியோர்களைக் கொண்டே ஆரம்பிக்க வேண்டும். கொலுப்படிக்கட்டுகளின் இருபுறமும் தீபம் ஏற்றுவது சிறப்பாகும். படிக்கட்டுகளின் கீழே நடுவில் குத்துவிளக்கை ஏற்றி தினமும் அம்பாள் ஸ்வரூபமாக நினைத்து பூஜிப்பதும் சிறப்பாகும்.

இந்த உலகமானது பஞ்ச பூதங்களின் [ஆகாசம் (வெற்றிடம்), வாயு (காற்று), அக்னி (நெருப்பு), ஆப: (தண்ணீர்), ப்ருத்வீ (மண்)] ஸ்வரூபமானது.

ஐம்பூதங்களில் ஒன்றான ப்ருத்வீ ஸ்வரூபமான மண்ணினால் ஆன தேவதைகளின் பொம்மைகளை சக்தியின் ஸ்வரூபமாக (அம்சமாக) எண்ணி நவராத்ரியில் கொலு வைத்து பூஜிப்பவர்களுக்கு ஸகல நன்மைகளையும் தருவேன் என தேவியே கூறியுள்ளாள். ஆகவேதான் மண் பொம்மைகளை கொலுவில் வைக்கும் பழக்கம் நம்மிடம் தொன்றுதொட்டு வருகின்றது. மரம், உலோகம் (பஞ்சலோகம் முதலானவை) , ரத்னங்களால் ஆன பொம்மைகளை வைக்கலாம். மற்றவற்றினால் செய்யப்படும் பொம்மைகள் உசிதமாகாது.

கீழிருந்து மூன்று படிக்கட்டுகளில் அரிசி, பருப்பு, தான்யங்களையும், அவற்றுடன் சேர்ந்தவைகளையும், அவற்றுடன் ஸம்பந்தப்பட்டவர்களையும் வைக்க வேண்டும். கீழிருந்து அடுத்த மூன்று படிக்கட்டுகளில் இவற்றை காப்பவர்களையும், ராஜா, ராணி, படைகள் போன்றவைகளான பொம்மைகளையும் வைக்க வேண்டும். மேலிருந்து கீழாக மூன்று படிக்கட்டுகளில் கலசத்தையும், தெய்வ உருவங்களையும், அவதார புருஷர்களையும் வைக்க வேண்டும். இப்படிக்கட்டுக்கள் மேலிருந்து கீழாக **ஸத்வம்**(அமைதி), **ரஜஸ்**(கோபம்), **தமோ**(மந்தம்) குணங்களைக் குறிப்பதாக அமைந்துள்ளன. இப் படிக்கட்டுக்கள் கூடும் போதும்,

குறையும் போதும் இம்முறையையே பின்பற்றலாம். நாம் அனைவரும் தமோ, ரஜோ குணங்களை விடுத்து ஸத்வ குணங்களை அடையவேண்டும் என்பதே கொலுப்படிக்கட்டின் நோக்கமாகும்.

ஸரஸ்வதி பூஜை

நாத்யாபயேந் ந ச லிகேந் நாதீயத கதாசந ।
புஸ்தகே ஸ்தாபிதே தேவீம் வித்யாகாமோ
த்விஜோத்தம: ॥
அஹம் பத்ரா ச பத்ராzஹம் நாவயோரந்தரம் க்வசித்।
ஸர்வஸித்திம் ப்ரதாஸ்யாமி
பத்ராயாமர்சிதாஹ்யஹம் ॥
ஆஶ்விநஸ்ய ஸிதே பக்ஷே மேதா நாம ஸரஸ்வதீ ।
மூலேநாவாஹயேத் தேவீம் ஶ்ரவணேந
விஸர்ஜயேத் ॥
இதி ஸரஸ்வதீ ஸ்தாபநம் ॥

வ்ரத சூடாமணி - பக்கம் - 113.

வித்யை - கல்வியை விரும்புபவன் மூல நக்ஷத்ரத்தில் ஸரஸ்வதீ பூஜையைச் செய்ய வேண்டும். ஶ்ரவணம் - திருவோணத்தில் விஸர்ஜனம் செய்ய வேண்டும். பூஜையின் நடுவில் கல்வி கற்பிக்கவோ, எழுதவோ, படிக்கவோ கூடாது. கல்வியை விரும்புபவன் புத்தகங்களில் ஸரஸ்வதீ தேவியை ஸ்தாபிக்க வேண்டும். என்னை அர்ச்சிப்பவனை நான் கல்வியில் சிறந்தவனாக்கி எப்பொழுதும்

இடைவெளியில்லாமல் ஸதாஸர்வகாலமும் காப்பேன். நான் அவனுக்கு அனைத்து ஸித்திகளையும் அளிப்பேன் என ஸரஸ்வதி வாக்களிக்கின்றாள்.

நவராத்ரியின் ஏழாம் நாளன்று ஓலைச்சுவடிகள், புத்தகங்கள், எழுதிய நோட்டுக்கள், பேனா, இசைக்கருவிகள் மற்றும் படிப்பு மற்றும் கலை சம்பந்தமான அனைத்தையும் அழகாக அடுக்கி வைக்க வேண்டும். அனைத்திற்கும் சந்தனம், அக்ஷதை குங்குமம், புஷ்பங்களால் அலங்கரித்து தேவீ ஸரஸ்வதியை அர்ச்சிக்க வேண்டும். விஜயதசமியன்று புனர்பூஜை செய்து அனைத்து புத்தகங்களையும் எடுத்து வாசிக்க வேண்டும். அல்லது முக்கியமான புத்தகங்களை வாசிக்க வேண்டும். இசைக்கருவிகளை இசைக்க வேண்டும். எப்பொழுதும் புத்தகங்களை ஜாக்ரதையாக வைத்துக்கொள்ள வேண்டும். உதாசீணப்படுத்தக்கூடாது. கரையான் மற்றும் பூச்சிகள் அரிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஏனெனில் ஸரஸ்வதீ தேவியானவள் அனைத்து புத்தகங்கள் மற்றும் எழுதும் நோட்டுக்களில் ஸதா ஸர்வகாலமும் வஸிக்கின்றாள்.

ஆயுதபூஜை

நாம் மஹாநவமீ அன்று ஸரஸ்வதீ பூஜையையும், ஆயுத பூஜையையும் செய்து வருகின்றோம். தேவர்கள் தங்கள் ஆயுதங்களை போர்க்கோலம் பூண்ட துர்கையிடம் அளித்து பின்

தசமியன்று வெற்றிக்குப்பின் மீண்டும் பன்மடங்கு வல்லமையுடன் தங்களின் ஆயுதப்படைகளை தேவியிடமிருந்து வணங்கிப்பெற்றதால் பூமியில் நாமும் நவமியில் ஆயுதங்களையும், அதில் உள்ள ஜட சக்தியையும் பூஜித்து பின் விஜயதசமியில் மீண்டும் பூஜித்து வரம் வேண்டிப்பெற்று பயன் படுத்துவது சிறப்பாகும். இதனால் இவ்விதமான ஆயுதங்களால் நமக்கு நன்மையும், மேன்மையும், சிறப்பும் கிடைக்கும்.

விஜயதசமி

நவராத்ரியின் பத்தாம் நாள் விஜயதசமியாகும். ஒன்பது நாட்கள் தேவியை வ்ரதமிருந்து பூஜித்து பத்தாம் நாளில் புன:பூஜை செய்து தேவியை உத்வாஸனம் செய்து பாரணையுடன் வ்ரதத்தை முடிக்க வேண்டும்.

இந்நாளில் காலையிலோ அல்லது மாலையிலோ வன்னிமர பூஜையைச் செய்ய வேண்டுமென ஆகமங்கள் வலியுறுத்துகின்றன.

நவராத்ரியின் ஒன்பது நாட்களுடன் விஜயதசமியையும் சேர்த்து தசராவாக வங்காளம் முதலான வட இந்தியாவில் சிறப்பாக கொண்டாடுகின்றனர்.

நவமியன்று அன்னையிடத்தில் தேவர்கள் அனைவரும் தத்தமது ஆயுதங்களை ஒப்படைத்தனர். தேவியும் சத்ரு ஸம்ஹாரத்தைச் செய்தாள். தசமி

திதியன்று தேவர்கள் புதிய சக்தியைப் பெற்றதான தங்களது ஆயுதங்களைப் பெற்றுக்கொண்டனர். ஆகவே தான் நாமும் நவமிதினத்தில் ஆயுதபூஜையைச் செய்து ஸமர்ப்பித்து விஜயதசமியில் புதியதாக எண்ணி செய்துவருகின்றோம்.

நவராத்ரியானது விஜயதசமியுடனேயே பூர்ணத்துவத்தை அடைகின்றது.

நவராத்ரியில் நிவேதனம், புஷ்பம் வகைகள்

நவராத்ரியில் 9 நாட்களிலும் 9 விதமான புஷ்பங்கள், பத்ரங்கள் (இலைகள்), பழங்கள், வஸ்த்ரங்கள், அன்னப்ப்ரசாதங்கள், சுண்டல், இனிப்பு வகைகள், காரவகைகள், பானவகைகள், தூபம், சாமரம் - (விசிறி), ராகம், தாளம், கோலம், கோலவடிவங்கள் ஆகியவை சிறப்பாக சொல்லப்பட்டுள்ளன.

புஷ்பங்கள் - மல்லிகை, செவ்வத்தி, முல்லை, ஜாதிமல்லி, செந்தாமரை, சம்பங்கி, பிச்சிப்பூ, வெள்ளை அரளி, வெண்தாமரை, கதம்பம்.

பத்ரங்கள் (இலைகள்) - வில்வம், மாவிலங்கம், திருநீற்றுப்பச்சை, மருகு, விளா, மரிக்கொழுந்து, நொச்சி, கிளுவை, தும்பை, வன்னி.

பழங்கள் - மலைவாழை, கொய்யா, செவ்வாழை, சாத்துக்குடி, மாதுளை, ஆப்பிள், திராட்சை, ரஸ்தாளி, ஆரஞ்சு, நேத்ரம்வாழை.

வஸ்த்ரங்கள் - மஞ்சள், சிகப்பு, ஆரஞ்சு, பச்சை, பொன்னிறம், நீலம், சந்தனகலர், இளம்சிகப்பு, வெண்மை, பலவர்ணம்.

அன்னப்ரசாதம் - சர்க்கரைப்பொங்கல், மிளகு சாதம், பருப்பு சாதம், சாம்பார் சாதம், புளியோதரை, தயிர்சாதம், வெண்பொங்கல், எலுமிச்சை சாதம், கல்கண்டு சாதம், அக்காரஅடிசல்.

சுண்டல் - சிகப்பு கொண்டைகடலை, பாசிப்பயறு, தட்டைப்பயறு, மொச்சை, கடலைப்பருப்பு, பட்டாணி, வேர்க்கடலை, கொள்ளு, வெள்ளை கொண்டைக்கடலை, நவதான்யம்.

இனிப்பு வகைகள் - புட்டு, அப்பம், அதிரஸம், லட்டு, ஜிலேபி, மைசூர்பாகு, ரவாகேஸரி, கோதுமை அல்வா, தேங்காய்பர்பி, போளி

காரவகைகள் - தேன்குழல், முறுக்கு, சீடை, தட்டை(தட்டவடை), மிளகுவடை, ஓமப்பொடி, பூந்தி, உளுந்துவடை, மனோகரம், காராசேவு.

பானவகைகள் - மதுபர்க்கம், பானகம், பழரஸம், நீர்மோர், கரும்புச்சாறு, எலுமிச்சை ரஸம், இளநீர், சுக்கு கஷாயம், காய்ச்சியபால், இஞ்சிபானகம்.

தூபம் - தசாங்கம், குங்குலியம், சாம்ப்ராணி, தேவதாரு, நெய், சந்தனம், அகில், மட்டிப்பால், பச்சைக்கற்பூரம், அகர்.

சாமரம்(விசிறி) - வெட்டிவேர், விளாமிச்சைவேர், தென்னைஓலை, மயில்தோகை, வெண்சாமரம், ஆலவட்டம், நன்னாரிவேர், முஞ்சிவேர், குருவிவேர், பனைஓலை.

ராகம் - ஆனந்தபைரவி, கல்யாணி, சங்கராபரணம், காம்போதி, பைரவி, புன்னாகவராளி, சகானா, கனடா, ஆகிரி, மத்யமாவதி.

தாளம் - த்ருவதாளம், மட்டியதாளம், ரூபகதாளம், ஜம்பதாளம், த்ரிபுடதாளம், அடதாளம், ஏகதாளம், மிச்ரஜாதிஜம்பதாளம், த்ருச்ரஜாதி த்ரிபுடதாளம், சதுஸ்ரம்.

கோலம் - அரிசிமாவு, கோதுமைமாவு, முத்து, அக்ஷதை, கடலை, பருப்பு, மலர், காசுகள், கற்பூரம், குன்றிமணி.

கோலவடிவங்கள் - பொட்டு, கட்டம், மலர், படிக்கட்டு, பறவை, தேவியின் பெயர், திட்டாணி, தாமரை, ஆயுதம், தேர்.

மேலே புஷ்பம் முதலானவைகள் வரிசை க்ரமமாக சொல்லப்பட்டுள்ளன. வீடுகள் மற்றும் ஆலயங்களில் நாம் கடைபிடிக்கும் முறையையே கூட கடைபிடிக்கலாம்.

நவராத்ரி பூஜை பலன்கள்

நவராத்ரி ஒன்பது நாட்களும் வ்ரதமிருந்து தேவியை வழிபடுவோருக்கு அன்னை த்ரிபுரஸுந்தரி தேவியானவள் ஸகல ஸௌபாக்யங்களையும் தருவாள். முடிவில் மறுபிறப்பற்ற மோக்ஷத்தையும் நல்குவாள் என்பதில் ஐயமில்லை.

நவராத்ரி நாள்களில் பூஜை செய்வோருக்கான காம்ய பலன்களும் சொல்லப்பட்டுள்ளன. அவைகள் தாரித்ர்யம் நீங்குதல், தான்யம் பெருகுதல், சத்ருக்களின் தொல்லைகளிலிருந்து விடுபடுதல், கல்வியில் மேன்மையடைதல், துன்பங்கள் நீங்குதல், செல்வம் பெருகுதல், க்ஷேமமடைதல், பயம் நீங்குதல், எல்லாவிதமான நலன்களும் உண்டாகுதல் என காம்ய பயன்களாகும்.

பராசக்தியை ஆச்ரயிக்கும் பக்தர்களுக்கு தேவி அபயத்தையும் வரத்தையும் நல்குகின்றாள்.

கொள்ளை, நோய், பஞ்சம், பூகம்பம், அதிவ்ருஷ்டி முதலான கஷ்டங்கள் ஏற்படும் போது தேவியை ஆராதித்தால் கஷ்டங்கள் நீங்கும் என்று கூறப்படுகின்றது.

நவராத்ரியில் கலச ஸ்தாபனம் செய்து ஒன்பது நாட்களும் வழிபடவேண்டும். முதல் மூன்று நாட்கள் துர்கை வழிபாட்டால் தீராத வினைகளும் தீரும். வெற்றிகள் நாடிவரும். தைர்யம், வீரம் மிக்கவர்களாகத்

திகழ்வார்கள். அடுத்த மூன்று நாட்கள் **லக்ஷ்மீ** வழிபாட்டால் நீங்காத செல்வம், புகழ், சாந்தி, ஐச்வர்யம் முதலியவை கிடைக்கும். கடைசி மூன்று நாட்கள் **ஸரஸ்வதீ** வழிபாட்டால் நல்ல குணசீலராகவும், கல்விகளில் வல்லவர்களாகவும், ஞானமுள்ளவர்களாகவும், ஸகல வித்யைகளிலும் புகழும், வாக்ஸித்தியும், நினைவாற்றலும் பெறுவார்கள்.

வீட்டில் அனைவரும் தேவீ பூஜை செய்து பலனடையலாம். அல்லது தேவீ ஸ்தோத்ரங்களைப் பாடியும், ஆலயங்களுக்குச் சென்று தேவியை வழிபட்டும் பயனடையலாம்.

பக்தியானது 9 விதமாக பாகவதத்தில் சொல்லப்பட்டுள்ளது அவையாவன - 1. **ச்ரவணம்** - தேவீ சரித்ரத்தைக் கேட்டல், 2. **கீர்த்தனம்** - தேவியின் புகழைப் பாடுதல், 3. **தேவ்யாஸ்மரணம்** - தேவியை எப்போதும் நினைத்தல், 4. **பாதஸேவனம்** - தேவியின் பாதங்களைப் பணிதல், 5. **அர்ச்சனம்** - தேவீபூஜை செய்தல், 6. **வந்தனம்** - தேவியை நமஸ்கரித்தல், 7. **தாஸ்யம்** - தேவிக்கு தொண்டு செய்தல் (அடிபணிதல்), 8. **ஸக்யம்** - தேவியிடம் நட்பு கொள்ளுதல், 9. **ஆத்ம நிவேதனம்** - தேவியிடத்தில் தன்னை உளமாற அர்ப்பணித்தல். இவற்றில் தன்னால் இயன்றவரை கடைபிடித்தால் தேவியின் அருளைப் பெறலாம்.

நவராத்ரி தேவீ பூஜை

மூன்று சக்திகளின் ஸ்வரூபியான தேவி நவராத்ரியின் முதல் மூன்று நாட்கள் துர்கையையும், அடுத்த மூன்று நாட்கள் லக்ஷ்மியையும், கடைசி மூன்று நாட்கள் ஸரஸ்வதியையும் சிறப்பாக வழிபடவேண்டும்.

இச்சா, ஞான, க்ரியா சக்திகளின் த்ரிகுணாத்ம ஸ்வரூபமாகவே தேவீ விளங்குகின்றாள். அன்னை பராசக்தி இந்த ப்ரபஞ்சத்தில் ஸர்வவ்யாபினியாக இருக்கின்றாள். இப்பராசக்தியே **ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹார**ங்களை விளையாட்டாகச் செய்கின்றாள்.

ஸசாமர ரமா வாணீ ஸவ்யதக்ஷிண ஸேவிதா, ரமாவாணீ நிஷேவிதா என்ற லலிதா ஸஹஸ்ரநாம வாக்யங்கள் ஸ்ரீதுர்கா பரமேச்வரீ தேவியானவள் ஸதா ஸர்வவகாலமும் லக்ஷ்மீ ஸரஸ்வதீ ஆகிய இரு சக்திகளை இருபுறமும் உடையவளாக இருக்கின்றாள் என சிறப்பிக்கின்றது.

சரத்காலே மஹாபூஜா க்ரியதே யா ச வார்ஷகீ என்ற ஸப்தசதீ வாக்யத்தினால் சரத்கால நவராத்ர தேவீ பூஜை சிறப்பு வாய்ந்ததாகும். **ஏகைவ சிவசக்திஸ்து மூர்த்தி பேதாதனேகதா** என்ற **அம்சுமதாகம** வாக்கியத்தின்படி சிவசக்தியே தனது சக்தியை பலரூபங்களாக வெளிப்படுத்துகின்றாள் என்று எடுத்துரைக்கின்றது.

நவராத்ரியில் எட்டாம் நாளிலோ அல்லது ஏதாவது ஒரு நாளிலோ வில்வ மரத்திலோ அல்லது அதன் கிளையைக் கொண்டுவந்து நிறுத்தியோ துர்கையை வழிபட்டால் இஷ்டஸித்தி ஏற்படும்.

கன்யகா பூஜை

நவராத்திரியில் தேவீ பூஜையுடன் கூட கன்யகா பூஜை மற்றும் ஸுமங்கலி பூஜை செய்வது விசேஷமாகும்.

நவராத்திரியில் ஏதாவது ஒரு நாளில் பருவமடையாத 2 முதல் 10 வயது வரை உள்ள கன்யகையை அம்பாளாக நினைத்து அம்பாளுக்குச் செய்யும் உபசாரங்களைச் செய்து வழிபட வேண்டும்.

தினமும் கன்யகா பூஜை செய்வதும் விசேஷமாகும். அவ்வாறு செய்வதானால் நியமத்துடன் செய்ய வேண்டும். முதல் நாளில் 2 வயது உள்ள கன்யகையை பூஜித்து இரண்டாம் நாளிலிருந்து 3,4,5 வயதுள்ள கன்யகைகளை முறையே பூஜிக்க வேண்டும். 9ம் நாளில் 10 வயதுள்ள கன்யகையை பூஜிக்க வேண்டும். அந்த கன்யகைகளுக்கு கௌமாரீ, த்ரிபுரா, கல்யாணீ, ரோஹிணீ, காளிகா, சண்டிகா, சாம்பவீ, துர்கா, ஸுபத்ரா என்று பெயர்களாகும். அங்கபூஜைக்குப் பிறகு அந்தந்த கன்யகைகளின் 9 நாமாக்களால் பூஜிக்க வேண்டும்.

ஒரே நாளிலும் 9 கன்யகைகளை பூஜிக்கலாம். அவ்வாறு பூஜிப்பதானால் 2 முதல் 10 வயதுள்ள கன்யகைகளை தெற்கிலிருந்து வடக்காக ஆஸனத்தில் அமரச்செய்து கௌமாரியில் துவங்கி ஸுபத்ரா வரை பூஜிக்க வேண்டும்.

ஸுமங்கலி பூஜை

நவராத்ரியில் ஏதாவது ஒரு நாளில் ஸுமங்கலி பூஜையைச் செய்ய வேண்டும். அல்லது 9 நாட்களிலும் கூட செய்யலாம்.

நமது சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டுள்ள லக்ஷணங்களுடன் கூடிய ஸுமங்கலியை அம்பாள் ஸ்வரூபமாகவே நினைத்து பூஜிக்க வேண்டும். அம்பாளுக்கு செய்யும் உபசாரங்களைச் செய்ய வேண்டும்.

பூஜையின் முடிவில் யஜமானன் முதலான அனைவரும் கன்யகைகள் மற்றும் ஸுமங்கலிகளுக்கு நமஸ்காரம் செய்து ஆசிகளைப் பெற வேண்டும்.

ஸ்தோத்ரங்கள்

நவராத்ரியில் கீழுள்ள ஸ்தோத்ரங்களைப் பாராயணம் செய்வது மிகுந்த பயனைத் தரவல்லது. **ஸ்தோத்ரப்ப்ரியா** என தேவி புகழப்படுகிறாள். நமக்கு தெரிந்த பாடல்களையோ, ஸ்தோத்ரங்களையோ பாடி அன்னையை மகிழ்விக்க வேண்டும். கீழுள்ள அனைத்தையுமே பாட வேண்டும் என்ற நியமமில்லை. நமக்கு தெரிந்த ஸ்தோத்ரங்களைப் பாடலாம். இதில் இல்லாத ஸ்தோத்ரங்களையும் பாடலாம். இது ஒரு குறிப்பு மட்டுமே. இந்த ஸ்தோத்ரங்களை நவராத்ரியில் மட்டுமல்லாது தினமும் அல்லது வெள்ளிக்கிழமைகளிலோ கூட பாராயணம் செய்வது அம்பிகையின் அருளை அடைவதற்கான வழியாகும்.

1. நவராத்ரியில் 9 நாட்களும் தேவீ ஸப்தசதி - **தேவீ மாஹாத்ம்யம்** தகுந்தவர்களைக்கொண்டு பாராயணம் செய்விக்கலாம்.
2. **ஸௌந்தர்யலஹரி**
3. **அபிராமி அந்தாதி**
4. **துர்கா ஸப்த ஸ்லோகீ**
5. **ஸ்ரீதுர்கா பஞ்சரத்ன ஸ்தோத்ரம்**
6. **துர்காஷ்டகம்**
7. **ஸ்ரீமஹாலக்ஷ்மீ அஷ்டகம்**
8. **ஸ்ரீ கனகதாரா ஸ்தோத்ரம்**
9. **ஸகலாகலா வல்லி மாலை**
10. **ஸரஸ்வதி அந்தாதி**
11. **மஹிஷாஸுரமர்தினி ஸ்தோத்ரம்**

நவராத்ரி வ்ரத நியமங்கள்

1. புரட்டாசி மாத அமாவாசை அன்று பூஜைக்குண்டான வஸ்துக்களை சேகரித்துக்கொள்ள வேண்டும்.
2. புரட்டாசி மாத வளர்பிறை ப்ரதமை திதியில் ஆரம்பித்து நவமி வரை ஒன்பது நாட்கள் விரதமிருந்து அம்பிகையை பூஜிக்க வேண்டும். விஜயதசமியன்று பாரணை செய்து விரதத்தை முடிக்க வேண்டும்.
3. அமாவாசையன்று பகல் ஒருவேளை மட்டும் உணவருந்தி, ப்ரதமை முதலான எட்டு நாட்களும் பகலில் உபவாசத்துடன் இரவு பால், பழம் மட்டும் உண்டு, நவமியன்று முழுவதுமாக உபவாசமிருந்து விஜயதசமியன்று பாரணையுடன் விரதத்தை முடிக்க வேண்டும்.
4. முழுவதுமாக விரதமிருக்க இயலாதவர்கள் ப்ரதமை முதல் எட்டு நாட்கள் பகல் மட்டும் உணவருந்தி மஹாநவமியன்று பால், பழம் மட்டும் உட்கொண்டு பூஜை செய்யலாம். தசமி திதியில் பாரணை செய்ய வேண்டும்.
5. ப்ரஹ்மோபதேசம் பெற்றவர்கள் இப்புத்தகத்தின் துணைகொண்டு பூஜை செய்யும் போது தகுந்த இடங்களில் வேத மந்த்ரங்களையும் சொல்லி பூஜை செய்யலாம். மற்றவர்கள் தரப்பட்டுள்ள ஸ்லோகங்களைக் கொண்டே பூஜிக்கலாம்.

6. பூஜைக்குண்டான கலசத்தில் அரிசி மற்றும் நவரத்னங்கள் முதலானவைகளை வைக்க வேண்டும். அல்லது அவரவர்கள் குடும்பவழக்கப்படியும் செய்து கொள்ளலாம்.
7. நவராத்திரியில் தினந்தோறும் காலையில் கலசத்திற்கு பூஜையைச் செய்ய வேண்டும். மாலையில் சிறப்பாக பூஜித்து உபசாரங்கள் செய்ய வேண்டும். சுண்டல் / பால் நிவேதனம் செய்ய வேண்டும்.
8. பூஜையின் போது 9 நாட்களில் கலசத்தை சலனம் அசைத்தல் கூடாது. 10ம் நாள் விஜயதசமியன்றே பூன:பூஜை செய்து சலனம் செய்ய வேண்டும்.
9. வீட்டிற்கு வரக்கூடிய கன்யா குழந்தைகள், ஸுமங்கலிகளுக்கு சக்திக்கேற்றவாறு தாம்பூலம் தரவேண்டும்.
10. கன்யாபூஜை, ஸுமங்கலி பூஜை, கோ பூஜை செய்வது பாக்யத்தைத் தரும்.
11. தினந்தோறும் வீட்டில் கொலுப்படிக்கட்டிற்கு முன் பச்சரிசி மாவினால் கோலமிட வேண்டும்.
12. தேவீ மந்த்ரங்களைச் ஜபம் செய்வதானால் தகுந்த உபாஸகர்களிடம் உபதேசம் பெற்றுக் கொள்ள வேண்டும். புத்தங்களைப் பார்த்து மந்த்ரங்களைத் தெரிந்து கொள்ளுதல் கூடாது. அவ்வாறு மந்த்ரங்களைக் கூறுவது விபரீத பலன்களைத் தரும்.
13. தேவீ பூஜையில் அருகம்புல், எருக்கு, மந்தாரப்பூ ஆகியவை கூடாது.

ஸாதாரணமாக கடைபிடிக்க வேண்டியவைகள்

1. நாம் எந்த காரியம் செய்வதானாலும் நமது குலதெய்வத்தையும், இஷ்ட தெய்வத்தையும் உளம்உருகி ப்ரார்த்தித்து ஆரம்பிக்க வேண்டும். அந்த இடத்தில் இருக்கும் குலப்பெரியோர்களை நமஸ்கரித்து ஆரம்பிக்க வேண்டும்.
2. கோலமிட்ட வீட்டில் அம்பிகை கொலுவிருப்பாள் என்பது ஆன்றோர் வாக்கு. ஆகவே தினமும் கோலமிடுதல் வேண்டும்.
3. நீரில்லா நெற்றி பாழ், நெய்யில்லா உண்டி பாழ் என்ற பழமொழிக்கினங்க நெற்றியில் திலக தாரணம் ஆண், பெண் இரு பாலருக்கும் பொதுவானதாகும்.
4. தினந்தோறும் ஆலயங்களுக்கு சென்று வழிபடுதல் இன்றியமையாததாகும். இறைவழிபாடு இந்து தர்மத்தில் முக்கியமானதாகும். ஆகவே இயன்ற அளவில் அருகிலுள்ள ஆலயங்களுக்கு சென்றுவர வேண்டும்.
5. ஆலய தர்சனத்திற்குச் செல்லும்போது நமது பாரம்பரிய உடைகளை அணிதல் முழுபலனையும் அளிக்கவல்லது.
6. ருத்ராக்ஷம் அணிதல் இருபாலருக்கும் பொதுவானதாகும். அனைவரும் ஒரு ருத்ராக்ஷத்தை எப்போதும் கழுத்தில் அணிந்திருக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் அதை கழட்டவேண்டிய அவசியம் சாஸ்த்ரப்படி இல்லை.

7. ஈர உடையுடனும், ஒரு உடையுடனும் எந்த காரியத்தையும் செய்யக்கூடாது.
8. தம்பதிகளுக்கு நடுவிலும், குரு-சிஷ்யர்களுக்கு நடுவிலும் செல்லுதல் கூடாது.
9. பசு மாட்டை எப்போதும் ப்ரதக்ஷிணமாகவே கடக்க வேண்டும்.
10. வீட்டில் மற்றும் கோவில்களில் தீபம் ஏற்றும் போது தெற்கு திக்கில் தீபத்தின்முகம் உள்ளவாறு ஏற்றக்கூடாது.
11. பூஜையின் போது புஷ்பங்களை முழுவதுமாகவும், பத்ரங்களைக் கிள்ளியும் அர்ச்சிக்க வேண்டும்.
12. கோவில்களில் அர்ச்சகர்களிடமிருந்து தான் ப்ரசாதங்களைப் பெறவேண்டும். தாமாக எடுத்துக்கொள்ளக் கூடாது.
13. சாப்பிடும்போது இடது கையினால் எந்த பதார்த்தங்களையும் போட்டுக்கொள்ளக்கூடாது.
14. தினமும் ஸூர்யோதயத்திற்கு முன்பாகவே எழுந்திருக்க வேண்டும்.
15. தினமும் நம்மால் முடிந்த அளவு ஸ்தோத்ரங்களையோ பாடல்களையோ இறைவனின் முன்பு பாடுதல் அன்றைய நாள் முழுதும் நமக்கு நல்ல பலன்களை அளித்தட உதவும்.

ஸ்ரீகுருப்யோ நம:

நவராத்ர்யுத்ஸவே தேவீ பூஜா

ஆசமனம்.

ஶுக்லாம்பரதரம் விஷ்ணும் ஶஶிவர்ணம் சதுர்புஜம் ।
ப்ரஸந்நவதநம் த்யாயேத் ஸர்வவிக்நோபஶாந்தயே ॥

ப்ராணாயாமம் ॥

விக்நேஶ்வரபூஜா ॥ புண்யாஹவாசனம் ॥

ஶுபே ஶோபநே முஹூர்த்தே ...... ஶுபதிதௌ மமோபாத்த ஸமஸ்த துரித க்ஷயத்வாரா ஸ்ரீபரமேஶ்வராஜ்ஞயா ஸ்ரீபரமேஶ்வரப்ரீத்யர்த்தம் ஸ்ரீதுர்காலக்ஷ்மீ ஸரஸ்வதீ ப்ரீத்யர்த்தம் ஶரந்நவராத்ர மஹோத்ஸவே ஸ்ரீதுர்காலக்ஷ்மீஸரஸ்வதீ பூஜாம் கரிஷ்யே ॥

கலச பூஜா, சங்க பூஜா, ஆத்ம பூஜா, பீட பூஜா இவைகளைச் செய்துகொண்டு ப்ரதான பூஜையை ஆரம்பிக்க வேண்டும்.

கும்பஸ்தாபநம்

கும்பத்தின் மீது தேவீ ப்ரதிமையை வைத்து ப்ராணப்ரதிஷ்டை செய்ய வேண்டும்.

மஹிஷக்நீம் மஹாதேவீம் குமாரீம் ஸிம்ஹவாஹிநீம்।
தானவாம்ஸ்தர்ஜயந்தீம் ச ஸர்வகாமதுகாம் ஶிவாம் ॥
த்யாயாமி மநஸா துர்காம் நாபிமத்யே வ்யவஸ்திதாம்।
ஆகச்ச வரதே தேவி தைத்யதர்ப நிபாதினி ॥

பூஜாம் க்ருஹாண ஸுமுகி நமஸ்தே ஶங்கரப்ரியே ।
ஸர்வதீர்த்தமயம் வாரி ஸர்வதேவஸமன்விதம் ॥
இமம் கடம் ஸமாகச்ச திஷ்ட தேவகணை: ஸஹ ।
துர்கே தேவி ஸமாகச்ச ஸாந்நித்யமிஹ கல்பய ॥
தேவீம் த்யாயாமி ॥

ஏஹி துர்கே மஹாபாகே ரக்ஷார்த்தம் மம ஸர்வதா ।
ஆவாஹயாம்யஹம் தேவி ஸர்வகாமார்த்தஸித்தயே ॥
ஆகச்சேஹ மஹாதேவி ஸர்வஸம்பத் ப்ரதாயினி ।
யாவத்வ்ரதம் ஸமாப்யேத தாவத் த்வம் ஸந்நிதௌ பவ ॥
தேவீம் ஆவாஹயாமி ॥

அநேகரத்நஸம்யுக்தம் நாநாமணிகணான்விதம் ।
கார்த்தஸ்வரமயம் திவ்யமாஸனம் ப்ரதிக்ருஹ்யதாம் ॥
தேவ்யை நம: ஆஸனம் ஸமர்பயாமி ॥

கங்காதி ஸர்வதீர்தேப்யோ மயா ப்ரார்த்தநயாஹ்ருதம் ।
தோயமேதத் ஸுகஸ்பர்ஶம் பாத்யார்த்தம்
ப்ரதிக்ருஹ்யதாம் ॥
தேவ்யை நம: பாத்யம் ஸமர்பயாமி ॥

நிதீனாம் ஸர்வரத்னாநாம் த்வமனர்க்யகுணா ஹ்யஸி ।
ஸிம்ஹோபரிஸ்திதே தேவி க்ருஹாணார்க்யம்
நமோஸ்zது தே ॥
தேவ்யை நம: - அர்க்யம் ஸமர்பயாமி ॥
கர்பூரேண ஸுகந்தேன ஸுரபி ஸ்வாது ஶீதலம் ।
தோயமாசமநீயார்த்தம் தேவி த்வம் ப்ரதிக்ருஹ்யதாம் ॥
தேவ்யை நம: - ஆசமனீயம் ஸமர்பயாமி ॥

மந்தாகின்யா: ஸமாநீதை: ஹேமாம்போருஹ
வாஸிதை: |
ஸ்நாநம் குருஷ்வ தேவேஶி ஸலிலைஶ்ச ஸுகந்திபி:||
தேவ்யை நம: - ஸ்நானம் ஸமர்பயாமி ||

பட்டகூலயுகம் தேவி கஞ்சுகேந ஸமன்விதம் |
பரிதேஹி க்ருபாம் க்ருத்வா துர்கே துர்கதிநாஶிநி ||
தேவ்யை நம: - வஸ்த்ரயுக்மம் ஸமர்பயாமி ||

ஸ்வர்ணஸூத்ரமயம் திவ்யம் ப்ரஹ்மணா நிர்மிதம்புரா|
உபவீதம் மயா தத்தம் க்ருஹாண பரமேஶ்வரீ ||
தேவ்யை நம: - உபவீதம் ஸமர்பயாமி ||

ஸ்ரீகண்டசந்தனம் திவ்யம் கந்தாட்யம் ஸுமநோஹரம் |
விலேபநம் ச தேவேஶி சந்தனம் ப்ரதிக்ருஹ்யதாம் ||
தேவ்யை நம: - கந்தம் தாரயாமி ||
ஹரித்ராகுங்குமம் ஸமர்பயாமி ||
ஸௌபாக்யஸூத்ரம் ஸமர்பயாமி ||
கஜ்ஜலம் ஸமர்பயாமி ||
ஆபரணானி ஸமர்பயாமி ||

பத்ம ஶங்கஜ புஷ்பாதி ஶதபத்ரைர் விசித்ரிதாம் |
புஷ்பமாலாம் ப்ரயச்சாமி க்ருஹாண த்வம் ஸுரேஶ்வரி ||
தேவ்யை நம: - புஷ்பமாலாம் ஸமர்பயாமி ||
புஷ்பை: ஸம்பூஜயாமி ||

அத அங்கபூஜா -

துர்காயை நம: - பாதௌ பூஜயாமி |
மஹாகாள்யை நம: - குல்பௌ பூஜயாமி |
மங்களாயை நம: - ஜாநுநீ பூஜயாமி |
காத்யாயன்யை நம: - ஊரூ பூஜயாமி |
பத்ரகாள்யை நம: - கடிம் பூஜயாமி |
கமலவாஸின்யை நம: - நாபிம் பூஜயாமி |
ஶிவாயை நம: - உதரம் பூஜயாமி |
க்ஷமாயை நம: - ஹ்ருதயம் பூஜயாமி |
கௌமார்யை நம: - ஸ்தநௌ பூஜயாமி |
உமாயை நம: - ஹஸ்தௌ பூஜயாமி |
மஹாகௌர்யை நம: - தக்ஷிணபாஹும் பூஜயாமி |
வைஷ்ணவ்யை நம: - வாமபாஹும் பூஜயாமி |
ரமாயை நம: - ஸ்கந்தௌ பூஜயாமி |
ஸ்கந்தமாத்ரே நம: - கண்டம் பூஜயாமி |
மஹிஷமர்திந்யை நம: - நேத்ரே பூஜயாமி |
ஸிம்ஹவாஹின்யை நம: - முகம் பூஜயாமி |
மாஹேஶ்வர்யை நம: - ஶிர: பூஜயாமி |
காத்யாயன்யை நம: - ஸர்வாண்யங்காநி பூஜயாமி |

துர்கா லக்ஷ்மீ ஸரஸ்வதீ அஷ்டோத்தர சத நாமார்ச்சனை

தஶாங்கம் குக்குலம் தூபம் சந்தனாகருஸம்யுதம் |
ஸமர்பிதம் மயா பக்த்யா மஹாதேவி ப்ரக்ருஹ்யதாம்||
தேவ்யை நம: - தூபமாக்ராபயாமி ||

க்ருதவர்த்தி ஸமாயுக்தம் மஹாதேஜோ
மஹோஜ்ஜ்வலம் ।
தீபம் தாஸ்யாமி தேவேஶி ஸுப்ரீதா பவ ஸர்வதா ॥
தேவ்யை நம: தீபம் தர்ஶயாமி ॥

அன்னம் சதுர்விதம் ஸ்வாது ரஸை: ஷட்பி:
ஸமன்விதம் ।
நைவேத்யம் க்ருஹ்யதாம் தேவி பக்திம் மே
ஹ்யசலாம் குரு ॥
தேவ்யை நம: மஹாநைவேத்யம் நிவேதயாமி ।
மத்யே மத்யே அம்ருதபானீயம் ஸமர்பயாமி ॥

ஏலாலவங்க கஸ்தூரீகர்பூரை: புண்யவாஸிதாம் ।
வீடிகாம் முகவாஸார்த்தமர்பயாமி ஸுரேஶ்வரி ॥
தேவ்யை நம: கர்பூரதாம்பூலம் ஸமர்பயாமி ॥

ஸர்வமங்களமாங்கல்யே ஶிவே ஸர்வார்த்தஸாதிகே ।
ஶரண்யே த்ர்யம்பிகே கௌரி நாராயணி நமோஸ்துதே॥
ஶரணாகத தீநார்த்த பரித்ராணபராயணே ।
ஸர்வஸ்யார்த்திஹரே தேவி நாராயணி நமோஸ்துதே॥
தேவ்யை நம: கர்பூரநீராஜநம் ஸ்மர்பயாமி ॥

மந்தார பாரிஜாதாதி பாடலீ கேதகானி ச ।
ஜாதீ சம்பக புஷ்பாணி க்ருஹாணேமானி ஶோபநே ॥
தேவ்யை நம: புஷ்பாஞ்ஜலிம் ஸமர்பயாமி ॥

துர்கே ஸ்ம்ருதா ஹரஸி பீதிமஶேஷஜந்தோ:
ஸ்வஸ்தை: ஸ்ம்ருதா மதிமதீவ ஶுபாம் ததாஸி ।
தாரித்ர்ய து:கபயஹாரிணி கா த்வதந்யா
ஸர்வோபகார கரணாய ஸதார்த்ரசித்தா ॥
தேவ்யை நம: ப்ரதக்ஷிண நமஸ்காராந் ஸமர்பயாமி॥

நவதுர்கா பூஜநம்

1. ஶைலபுத்ர்யை நம: ।
2. ப்ரஹ்மசாரிண்யை நம: ।
3. சந்த்ரகண்டாயை நம: ।
4. கூஷ்மாண்டாயை நம: ।
5. ஸ்கந்தமாத்ரே நம: ।
6. காத்யாயந்யை நம: ।
7. காலராத்ர்யை நம: ।
8. மஹாகௌர்யை நம: ।
9. ஸித்திதாயை நம: ।

ஸர்வமங்களமாங்கள்யே ஶிவே ஸர்வார்த்தஸாதிகே ।
ஶரண்யே த்ர்யம்பிகே கௌரி நாராயணி நமோஸ்துதே॥
ரூபம் தேஹி யஶோ தேஹி பகம் பகவதி தேஹி மே ।
புத்ராந் தேஹி தநம் தேஹி ஸர்வாந் காமாந்
ப்ரதேஹி மே ॥
ஸாது வா ஸாது வா கர்ம யத்யதாசரிதம் மயா ।
தத்ஸர்வம் க்ருபயா தேவி க்ருஹாணாராதநம் மம ॥

(விஜயதஶம்யாம்)

மஹிஷக்நி மஹாமாயே சாமுண்டே முண்டமாலிநி ।
ஆயுராரோக்யமைஶ்வர்யம் தேஹி தேவி
நமோzஸ்து தே ॥
(**இதி ப்ரார்த்ய**) என்று ப்ரார்த்தித்து,

<u>தேவ்யுத்வாஸநம் -</u>

உத்திஷ்ட தேவி சண்டேஶி
ஶுபாம் பூஜாம் ப்ரக்ருஹ்ய ச ।
குருஷ்வ மம கல்யாணம்
அஷ்டபி: ஶக்திபி: ஸஹ ॥ (இதி உத்தாப்ய)

துர்கே தேவி ஜகந்மாத: ஸ்வஸ்தாநம் கச்ச பூஜிதே ।
ஸம்வத்ஸரே வ்யதீதே து புநராகமநாய வை ॥
இமாம் பூஜாம் மயா தேவி யதாஶக்த்யுபபாதிதாம் ।
ரக்ஷார்த்தம் த்வம் ஸமாதாய வ்ரஜ
ஸ்வஸ்தாநமுத்தமம் ॥

இதி விஸர்ஜயேத் ॥

நவராத்ர்யுத்ஸவே கன்யகா பூஜா - பொது
(ஏகதிநபக்ஷே)

ஶுக்லாம்பரதரம் + ஸ்ரீபரமேஶ்வரப்ரீத்யர்த்தம் ஸ்ரீதுர்காலக்ஷ்மீஸரஸ்வதீ ஸ்வரூப ஸ்ரீமஹாத்ரிபுரஸுந்தரீ ப்ரீத்யர்த்தம் ஶரந்நவராத்ர மஹோத்ஸவாங்கதயா ஸ்ரீமஹாத்ரிபுரஸுந்தரீஸ்வரூப கன்யகாபூஜாம் கரிஷ்யே ||

கலஶ பூஜை முதலானவைகளைச் செய்துவிட்டு கன்யகையை ஆஸனத்தில் அமரச்செய்து,

மந்த்ராக்ஷரமயீம் தேவீம் மாத்ரூணாம் ரூபதாரிணீம் |
நவதுர்காத்மிகாம் ஸாக்ஷாத் கன்யாம்
ஆவாஹயாம்யஹம் ||
ஸ்ரீமஹாத்ரிபுரஸுந்தரீ ஸ்வரூபாம் கன்யாம் த்யாயாமி | ஆவாஹயாமி ||

வந்திதாங்க்ரியுகே தேவி ஸர்வஸௌபாக்யதாயிநி |
ஸ்வர்ணஸிம்ஹாஸநம் துர்கே ஆஸநம் தே
ததாம்யஹம் ||
கன்யகாயை நம: - ஆஸநம் ஸமர்பயாமி ||

கந்தபுஷ்பாக்ஷதைர்யுக்தம் ஶீதலம் நிர்மலம் ஜலம் |
பாத்யார்த்தம் ஶுத்தமாநீதம் பாத்யம் தே
ப்ரததாம்யஹம் ||
கன்யகாயை நம: - பாத்யம் ஸமர்பயாமி ||

அர்க்யம் ச பலஸம்யுக்தம் ஸர்வஸௌபாக்யதாயினி ।
க்ருஹாண தேவி வரதே துர்கா தேவ்யை
நமோஸ்து தே ॥
கன்யகாயை நம: - அர்க்யம் ஸமர்பயாமி ॥

கங்காதோயம் ஸமானீதம் ஸுவர்ணகலஶே ஸ்திதம் ।
ஆசம்யதாம் மஹாபாகே துர்கே துர்கார்த்தி நாஶினி ॥
கன்யகாயை நம: - ஆசமனம் ஸமர்பயாமி ॥

கங்கா ஸரஸ்வதீ ரேவா காவரீ யமுநாஜலை: ।
ஸ்நாபிதாஸி மயா தேவி ததா ஶாந்திம் குருஷ்வ மே॥
கன்யகாயை நம: - ஸ்நபயாமி ॥
ஆசமனீயம் ஸமர்பயாமி ॥

ஸர்வபூதாதிபே ஸௌம்யே லோகலஜ்ஜாநிவாரிணி ।
வாஸஸீ ப்ரதிக்ருஹ்யேதாம் மயா துப்யம் ஸமர்பிதே॥
கன்யகாயை நம: - வஸ்த்ரயுக்மம் ஸமர்பயாமி ॥
ஆசமநீயம் ஸமர்பயாமி ॥

கிரீட ஹார கேயூர குண்டலாங்கத கங்கணை: ।
ஹம்ஸகைர்மேகலாத்யைஶ்ச பூஷயேத் த்வாம்
குமாரிகே ॥
கன்யகாயை நம: - பூஷணம் ஸமர்பயாமி ॥

தாடங்கம் கண்டஸூத்ரம் ச ஸிந்தூரம் கஜ்ஜலாதிகம்।
ஸௌமங்கள்யப்ரதே தேவி க்ருஹாண கருணாநிதே ॥
கன்யகாயை நம: - ஸௌபாக்யத்ரவ்யாநி
ஸமர்பயாமி ॥

சந்தநாகரு கஸ்தூரீ ஹிமவாலுக கேஸரை: ।
கந்தம் தாஸ்யாமி வரதே கௌமாரி ப்ரதிக்ருஹ்யதாம்॥
கன்யகாயை நம: - கந்தாந் தாரயாமி ॥
ஹரித்ராசூர்ணம் ஸமர்பயாமி ॥
அலக்தகம் ஸமர்பயாமி ॥
ஹரித்ராகுங்குமம் ஸமர்பயாமி ॥

நாநாவிதாநி திவ்யானி நாநாவர்ணயுதாநி ச ।
புஷ்பாணி தே ப்ரயச்சாமி பக்த்யா தேவி வரப்ரதே ॥
கன்யகாயை நம: - புஷ்பமாலாம் ஸமர்பயாமி ॥

அத அங்க பூஜா -

1. கௌமார்யை நம:	7. ஸுபத்ராயை நம:
2. கல்யாண்யை நம:	8. ஸுமங்களாயை நம:
3. கன்யகாயை நம:	9. காருண்யமூர்த்தயே நம:
4. பத்ராயை நம:	10. ஸுலலாடாயை நம:
5. ரோஹிண்யை நம:	11. மாங்கள்யை நம:
6. விஶ்வாயை நம:	12. மஹேஶ்வர்யை நம:
13. நவதுர்காத்மிகாயை நம:	

காலாகருஸமுத்பூத: தேவத்ரும ரஸான்வித: ।
ஆக்ரயதாமயம் தூப: பவானி க்ராணதர்பண: ॥
கன்யகாயை நம: - தூபமாக்ராபயாமி ॥

ஸாஜ்யம் த்ரிவர்த்திஸம்யுக்தம் வஹ்நிநா யோஜிதம் மயா ।
க்ருஹாண மங்களம் தீபம் த்ரைலோக்யதிமிராபஹம் ॥
கன்யகாயை நம: - தீபம் தர்ஶயாமி ॥

